**மத்திய அதிவேகப் பாதைச் செயற்திட்டம் - 2015.**

---

மத்திய அதிவேகப் பாதைச் செயற்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள் நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

முன்னால் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சாகவிருந்த தற்போதைய உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் அமுல்படுத்தப்படுகின்றது. கொழும்பு நகர மற்றும் வட மத்திய மாகாணத்திலுள்ள தம்புள்ள நகரத்தை இணைக்கும் தேசிய அதிவேகப்பாதை வலையமைப்பின் ஒரு பகுதியை தோற்றுவிக்கும் 182 கிலோமீற்றர்கள் மத்திய அதிவேகப்பாதையை நிர்மாணிப்பது செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். நிர்மாண வேலைகளானது கண்டி நகரத்துடன் இணைந்து 04 கட்டங்களின் கீழ் அமுல்படுத்துவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்திற்கான நிதிசார் ஏற்பாடுகள் மற்றும் அதன் காலப்பகுதி 2017 திசெம்பர் 31 வரையிலும் இறுதியாக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கத்தின் நிதிகளிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றைக் காட்டும் வண்ணம் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் போதிய கணக்கீட்டு பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காக கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஊ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் பந்தி 2.2 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கு முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை அரசாங்கத்திடமிருந்து செயற்திட்ட நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக பெறப்பட்ட ரூபா 1,409.10 மில்லியன் தொகையான பங்களிப்பு நிதி மூலங்களின் கீழ் காட்டுவதற்கு பதிலாக, நிதிநிலைமைக்கூற்றில் நடைமுறையல்லாப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 1.66 மில்லியன் கூட்டுத்தொகையான செலுத்த வேண்டிய மீதிகள் நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக, நிதிநிலமைக்கூற்றில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலையின் கீழ் மற்றும் நடைமுறை பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்ட மீதிகள் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

### 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

#### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீடு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்படு தொடர்பான சில முக்கிய புள்ளி விபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|
| | | மீளாய்வாண்டின் போது | | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ரூபா. மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் |
| இலங்கை அரசாங்கம் | 200.00 | 0.55 | 75.60 | 10.28 | 1,409.10 |
| **மொத்தம்** | **200.00** | **0.55** | **75.60** | **10.28** | **1,409.10** |

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அனுமதிபெற்ற விஷேட வங்கியொன்றிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் பெறப்பட்ட கடனொன்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ரூபா 335.90 மில்லியன் தொகையான ஒதுக்கீட்டில் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும், கடனை தீர்ப்பதற்கு செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் கணக்காய்விற்காக விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்குறிப்பிடப்பட்ட தகவல்களின் பிரகாரம், முறையான கிரய மதிப்பீடுகளின் குறைபாடுகள் காரணமாக மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 200 மில்லியன் தொகையான ஒதுக்கீட்டில், 2015 திசெம்பர் 31 இல் ரூபா 75.6 மில்லியன் தொகையொன்று மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீக செயன்முன்னேற்றம்

என்டேரமுல்லாவிலிருந்து தம்புள்ள வரையான 100 கிலோமீற்றர்கள் வடக்கு அதிவேக பாதையை நிர்மாணித்தலின் கீழான நடவடிக்கைகள் 2007 – 2017 இற்கான தேசிய பிரதான வீதி திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. நிர்மாண நடவடிக்கைகள் 04 கட்டத்தின் கீழ் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டதுடன் புதுஹெற இலிருந்து கலஹெதற வரையிலான மத்திய அதிவேக பாதைக்கு இணைக்கப்பட்டது. எனினும், வடக்கு அதிவேக பாதையை நிர்மாணிப்பதற்கான முன்மொழிவு இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் அமைச்சரவையானது கண்டி நகரத்திற்கான அதிவேக பாதையுடன் இணைந்து கடவத்தயிலிருந்து தம்புள்ள வரையில் 182 கிலோமீற்றர் மத்திய பாதையை நிர்மாணிப்பதற்கு 2015 யூலை 16 இல் இடம்பெற்ற அதன் கூட்டத்தில் தீர்மானித்திருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

ரூபா 543.94 மில்லியன் மற்றும் வரிகளில்லாத ரூபா 414.23 மில்லியனுக்கு சமனான அவுஸ்ரேலிய டொலர் 4.00 மில்லியனில் அவுஸ்ரேலியா நிறுவனமொன்றிற்கு 2013 சனவரி 09 இல் ஆலோசனை சேவைகளுக்கான மூல ஒப்பந்தம் வழங்கப்பட்டது. எனினும், ஆலோசனைகள் ஒப்பந்தத்திற்கான கிரயமானது சீனா தர நியமங்கள் மற்றும் அவுஸ்ரேலியா தர நியமங்களுக்கு ஏற்ப வீதி நிர்மாண வேலைகளை மாற்றியமை மற்றும் மத்திய அதிவேக பாதையின் சாத்தியவள அறிக்கைகளில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களால் ரூபா 757.69 மில்லியன் மற்றும் வரிகளற்ற ரூபா 583.07 மில்லியனுக்கு சமமான அவுஸ்ரேலியா டொலர் 6.34 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. மேலும், ஆரம்ப புவியமைப்பு ஆய்வு, ஆரம்ப புவிமேலோடு ஆய்வு மற்றும் ஆரம்ப நீர்வள ஆய்வு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு கிடையேயான ஒழுங்கமைப்பு, நிலையான ஒழுங்கமைப்பு, குறுக்குப் பிரிவுகள் மற்றும் வரைபடங்களை தயாரித்தல் தொடர்பான சீன தர நியமங்களை பின்பற்றுவதற்கான அனுமதி கடிதம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக, செயற்திட்டத்தால் ஆலோசனை சேவைகள் தொடர்பாக வரி விலக்கினை பெறுவதற்கு ஆரம்ப நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அதன் விளைவாக செயற்திட்டத்தால் அதன் மீதான வரியாக ரூபா 274.08 மில்லியன் தொகையொன்று நேரிடவுள்ளது.

### 3.4 நிதிசார் கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்

நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம், நிலையான சொத்துக்களின் வருடாந்த மெய்மையாய்வு செயற்திட்டத்தினால் 2015 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து மாற்றப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் வகைகள் பல மீள்மதிப்பிடப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

மீளாய்வாண்டின் போது 15 ஆலோசனையாளர்கள் மற்றும் 02 பொது இணைப்பு உத்தியோகத்தர்கள் போன்ற பதவிகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்படாதிருந்த போதிலும் அவர்களினால் நியமிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் 10 ஆலோசனையாளர்களின் கல்விசார் மற்றும் தொழில்சார் தகைமைகளை நிரூபிப்பதற்கான சான்றிதழ்கள் கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்படவில்லை.